
# திருமறை ஆசான்

புதிய ஏற்பாட்டுத் தூய கிறிஸ்தவ மாத இதழ்

மலர் 2 | டிசம்பர் 1989 | இதழ் 12

பரிசுத்த



வேதாகமம்

வெளியிடுவோர்:-

ஈரோடு கிறிஸ்துவின் சபையார்

2, மணல் மேடு வீதி, ஈரோடு-628 002.

நீங்கள் ஈரோட்டில் இருக்க நேர்ந்தால் கீழ்க்கண்ட நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டு கர்த்தருடைய பிள்ளைகளோடு சேர்ந்து ஆராதியுங்கள்.

*ஜெபியுங்கள்!* *பங்கு கொள்ளுங்கள்!!*

**திருமறை ஆசான் மூன்றாவது ஆண்டு விழா**

கிறிஸ்தவச் சிந்தனையாளர்கள் கருத்தரங்கம்

காலம் : 1990 ஜனவரி 12, வெள்ளி மாலை 6 மணி-
ஆண்டு விழா
,, ,, 13, சனி காலை 9 மணி முதல்
மாலை 6 மணி வரை கருத்தரங்கம்.

இடம் : 2, மணல் மேடு வீதி ஈரோடு 638002.

பொருள்: **வேதாகம அடிப்படையில் கிறிஸ்தவ ஒற்றுமை**

1. கிறிஸ்தவ ஒற்றுமையில் ஆர்வமுள்ள அனைவரும் கலந்து கொள்ளலாம்.
2. கலந்து கொள்ளவும் கருத்துத் தெரிவிக்கவும் விரும்புகிறவர்கள் 5-1-1990க்குள் விழாக் குழுவினருக்குத் தகவல் கொடுக்கவும்.
3. உணவுக்கும் உறைவிடத்துக்கும் (இரண்டு நாட்களுக்கும் சேர்த்து) நன்கொடை ரூ. 10/- 50 கிலோ மீட்டர் தூரத்துக்கும் அதிகமான தொலைவில் இருந்து வருகிறவர்கள் பதிவுக் கட்டணம் மட்டும் ரூ. 2/- செலுத்தினால் போதும். இரு சாராருக்கும் முன் பதிவு அவசியம். ஆகவே M. O. செய்த ரசீது எண்ணைக் குறிப்பிட்டு ஒரு PC. எழுதவும்.

இன்னணம்
விழாக் குழுவினர்

*தொடர்பு முகவரி*
**சகோ. N. நேசகுமாரன்**
*2, மணல் மேடு வீதி*
*ஈரோடு 638002.*

# THIRUMARAI AASAAN

Editor : Honorary Editor
E. Z. SELVANAYAGAM J. C. CHOATE

Published by Church of Christ
2, Manalmedu Street, ERODE-638 002. Tamil Nadu. India
Pleading for the restoration of pure New Testament Christianity:

Vol 2. December—1989 Issue 12

**ஆசிரியவுரை**

## வாருங்கள்! கை கொடுங்கள் !

ஆயிற்று! இன்னும் இரண்டே வாரங்கள்தான். 1989-ம் ஆண்டு கடந்த ஆண்டாகி விடும். புதிய ஆண்டு பொலிவுடன் மலர ஆயத்தமாகிக் கொண்டிருக்கிறது. இம்மட்டும் காத்த தேவன், வரவிருக்கும் புதிய ஆண்டுக்குள்ளும் பிரவேசிக்கக் கிருபை அளிப்பார் என்று நம்புவோம். அட்வான்ஸ் நன்றி, ஸ்தோத்திரம் !

புதிய ஆண்டாகிய 1990க்குள் நுழையத் துடிக்கும் திருமறை ஆசான் வாசகர்களே! உங்களுக்கோர் கனிவான வேண்டுகோள், உருக்கமான மன்றாட்டு சிந்திப்பீர் !

இயேசுகிறிஸ்து இந்த உலகத்திற்கு வந்த பிரதான நோக்கம் ''இழந்து போனதைத் தேடவும் இரட்சிக்கவுமே'' (லூக் 19:10). ஆயினும் பல சமயங்களில், பிணியுற்றோர், பிசாசு பிடித்தோர், மரணத்தால் விழுங்கப்பட்டோர் மீது மனதுருகி அவ்வப்பொழுது அவர்களுக்கு உதவி, அவர்கள் கண்ணீரைத் துடைத்தார்.

அதனால் இழந்து போனதைத் தேடவந்த இயேசுவுக்கு இருந்த மதிப்பு, கிடைத்த வரவேற்பு ஆகியவைகளைக் காட்டிலும் மக்களின் வாழ்க்கைப் பிரச்சனைகளில் உள்ள சிக்கல்களைத் தீர்த்து வைத்த இயேசுக்கு மக்கள் மத்தியில் அதிக வரவேற்பும், மதிப்பும், மரியாதையும் இருந்ததை நாம் வாசித்துப் புரிந்து கொள்கிறோம். ரோமப்பேரரசை எதிர்த்துப் போராடி, வெற்றி பெற்று, இராஜாவாகி நம்முடைய துன்பம் துயரங்களை எல்லாம் நீக்கிப் போடுவார் என்று

எண்ணி, குருத்தோலையைப் பிடித்துக் கொண்டும். ஆர்வ மிகுதி-யால் மரக் கிளைகளை வெட்டிப் பாதை நெடுகப் போட்டு, மேலங்கி-களையும், உருமால்களையும் அதன் மீது பரப்பி ''ஓசன்னா'' போட்ட மக்கள் கூட்டம் (லூக் 19:38) இயேசு தாம் மண்ணு-லகுக்கு வந்த பிரதான நோக்கத்தை வியைத்தோடு விளக்க முற்-பட்ட போது, முகம் சுளித்து பின் வாங்கிப் போயினர். (யோவான் 6:60,66) அன்று மட்டுமல்ல; இன்றும் இதுவே மக்கள் நிலை கம்யூனசம் என்றும், சோஷியலிசம் என்றும் ஏதேதோ சித்தாந்த சாயங்களைப் பூசிப் பார்க்கிறார்கள். இரண்டாயிரம் ஆண்டுகள் ஆகியும் மாற்றம் இல்லை. மனிதன் மாறவில்லை.

கிறிஸ்தவ மார்க்கம் பெரிய அளவில் ஆக்கப் பூர்வமான பணிகளைச் செய்து, அமைதியான சமுதாயப் புரட்சி செய்ததி-னால், சமுதாயத்தின் அடித்தட்டில் புழுவாய் நெளிந்து கொண்-டிருந்த மக்களில் கணிசமான பேர் ஏற்றம் பெற்றிருக்கிறோம். என்பது உண்மை. ஆனால் அதே போதும் என்று இயேசுகிறிஸ்து வந்ததின் தலையாய நோக்கமாகிய ஆத்தும இரட்சிப்பை அலட்-சியம் செய்து வாழ்வோமானால், அவர் வாழ்ந்த அந்நாட்களில் அவரை அரசராகவும், பிணி தீர்க்கும் வைத்தியனாகவும், பேயோட்-டும் மந்திரவாதியாகவும், சமுதாய சீர்திருத்தவாதியாகவும் நினைத்து ஏமாந்து போய், விரக்தியடைந்த யூதமக்களைக் காட்டி-லும் நாம் வித்தியாசமானவர்கள் அல்ல என்று காலம் நம்மைப் பழிக்கும். சொல்லப் போனால் அவர்களை விட நாம் அதிக ஆக்கி-னை அடைவோம். ஏனெனில், அவர்கள் வாழ்ந்த காலத்திலும், சூழ்நிலையிலும் இருந்ததை விட அதிக அளவில் ''இயேசுகிறிஸ்து தேவனுடைய குமாரன்'' என்பதற்கு அதிக சான்றுகள் நமக்கு இருக்கின்றன. கொரி 15:19; 1பேதுரு 1:10-12; மத் 13:17.

இதை வாசிக்கும் எனது மதிப்புக்கும், அன்புக்கும் உரிய சான்றோரே, தாய்க்குலமே, இளைய சமுதாயமே! ஒரு சில சமு-தாய மாற்றத்திற்கும், அழிந்து போகிற சரீர நன்மைகளுக்குமா நமது ஆண்டவர், தேவனுக்குச் சமமாக இருந்த நிலையை விட்டு, மண்ணுலகுக்கு வந்து குருதி சிந்தினார். உயிர் நீத்தார்? இல்லை. இல்லவே இல்லை. பாவத்துக்கும், சாத்தானுக்கும், அடிமைப்பட்டுக் கிடந்த நம்மை, அக்காலத்திலே கிறிஸ்துவைச் சேராதவர்களும், இஸ்ரவேலருடைய காணியாட்சிக்குப் புறம்பானவர்களும், வாக்-குத்தத்தின் உடன்படிக்கைகளுக்கு அந்நியரும், நம்பிக்கையற்றவர்-களும், இவ்வுலகத்தில் தேவனற்றவர்களாகவும், இருந்த நம்மைத் (எபே 2 : 12) தெரிந்து கொண்டதின் நோக்கம்: இந்த அற்பச் சங்கதிகளுக்காக அல்ல. சமுதாய முன்னேற்றமும், பொருளாதார மேம்பாடும், வாழ்க்கை வசதியும் தான் முக்கியம் என்றால் அதற்கு

எண்ணற்ற நிறுவனங்களும், அமைப்புகளும், நற்பணி மன்றங்களும் உண்டே! அதற்கு இத்தனை பாடுகள் ஏன்? சிந்தித்துப்பாருங்கள். நிச்சயமாக, மேற்சொன்னவைகளைவிட, மேலான, என்றென்றும் நிலைத்து, நிற்கக்கூடிய காரணங்களுக்காகத்தான் நம்மைத் தெரிந்து கொண்டார். முன்னே தூரமாயிருந்த நம்மை சமீபமாக்கி, பகையாக நின்ற தடுப்பு சுவரை அகற்றி தேவனுக்கும், நமக்கும் உள்ள உறவைச் செப்பனிட்டு, ஆத்தும இரட்சிப்பை அருளவே நம்மைத் தெரிந்து கொண்டார். (யோவான் 15. 16), அதை நமக்கு இலவசமாக அளிக்கவே இவ்வுலகுக்கு வந்தார். பாடுகள்பட்டார். இரத்தம் சிந்தினார். சிலுவையில் மாண்டார்.

இந்தப் பேருண்மைகளை நாம் எந்த அளவுக்குப் புரிந்து கொண்டிருக்கிறோம்? இந்த உயர்ந்த நோக்கங்களும், இலட்சியங்களும் தற்காலக் கிறிஸ்தவ இளம் உள்ளங்களில் உருவாக நாம் என்ன முயற்சிகள் மேற்கொண்டு வருகிறோம்? ஆண்டுக்கொரு கன்வென்ஷன் — ஆலயங்களில் அரை மணி நேரத்திற்கு மிகைப்படாத ஆராதனை - வீடுதேடி போதகர் வந்தால் ஊர் வம்பெல்லாம் முடித்த பிறகு, இறுதியில் ஒரு 'சிறு ஜெபம்'. திருமணமா?, சந்தடிக்கு, மத்தியில் ஒரு 'குட்டிப் பிரசங்கம்' - ஒரு 'சுருக்கமான ஜெபம்' விசேஷ காலங்களில் எல்லா விதமான சடங்குகளும் ஓய்ந்த பிறகு, நாங்களும் கிறிஸ்தவர்கள் தான் என்று காட்டி கொள்ள தேர்ந்தெடுக்கப்பட்ட சிறு சிறு சங்கீத வாசிப்புகள், நம்மை ஆண்டவர் அழைத்த அழைப்புக்கு பாத்திரவான்களாக்க, சிலுவையைச் சுமந்து கொண்டு அவருடைய அடிச்சுவட்டைப் பின்பற்றுபவர்களாக மாற்ற இவைகள் மாத்திரம் போதுமா? இதோ, அதோ என்று இரண்டாயிரம் ஆண்டுகள் நெருங்கி விட்டது. இனியும் நமக்குக் கொடுக்கப்பட்ட இக்கிருபையின் காலத்தைப் பயன்படுத்தாமல், பிசாசுக்குத் துணை போவது சரியா? நம்முடைய மெத்தனப் போக்கை மோப்பம் பிடித்துக் கொண்ட சாத்தான் பலவகைகளில் கிறிஸ்தவ அறத்தை மக்கள் மனதிலிருந்து துடைத்துப் போட தீவிரமாகச் செயல்படுகின்றான்.

முன்பெல்லாம் சினிமா தியேட்டர்களுக்குச் சென்று திரைப்படம் பார்க்க வைத்து மக்களைக் கெடுத்தான். அதையே கொடுமை என்று வர்ணித்துக் கூப்பாடு போட்டோம். இப்பொழுது வீட்டுக்கொரு தொலைக் காட்சியை வழங்கி இன்னும் வேகமாக அழிவை நோக்கிப் பயணம் செய்யுங்கள் என்று, ''விஞ்ஞானத்தின் வினோதங்கள் பாரீர்'' என்று கூவி அழைக்கிறான். இது ஒருபுறம் மற்றொரு புறத்தில் இரட்சிப்பைப் பற்றியும், மோட்சானந்த பாக்கியங்களையும் விட, வயிற்றுப் பிழைப்பும், பேரும், புகழும், பணமும் பெரிது என்று நினைக்கிற கயமைக் குணம் படைத்தவர்

களுக்கு, ஒளியின் பிள்ளைகளின் வேஷத்தைத் தரிப்பித்து பக்குவ-மாய் பயன்படுத்தி, எங்கும், என்றும், எப்பொழுதும் இல்லாத மூட நம்பிக்கைகளைக் கிறிஸ்துவத்துக்குள் புகுத்தி, கிறிஸ்தவ அறம் போற்றும் உயர்நெறிகளையும், உபதேசங்களையும் ஓரம் கட்டிக் கொண்டிருக்கிறான்.

இதில் வேடிக்கை என்னவென்றால், கிறிஸ்துவ அறம் தழைக்க வேண்டும் என்று மனதார விரும்பும் சான்றோர்களை-யும் தந்திரமாய் வஞ்சித்து, எது உண்மை, எதுபோலி என்று அடையாளம் கண்டு கொள்ள முடியாதபடி, அவர்களுடைய கருத்துக் கண்களைக் குருடாக்கிப் போடுகிறான். (2 கொரி 4:4).

நல்லெண்ணம் கொண்ட சான்றோரே! நாம் நல்லவர்களாக மட்டும் இருந்தால் போதாது. வல்லவர்களாகவும் இருக்க வேண்-டும். ''புறாவைப் போல் கபடமற்றவர்களாகவும், சர்ப்பத்தைப் போல் வினாவுள்ளவர்களாகவும் இராவிட்டால் எஞ்சியிருக்கிற ஒரு சிலரையும் தன் வலைக்குள் விழவைத்து விடுவான். ஆகவே, வாருங்கள், கைகொடுங்கள். தடம்புரண்டு கிடக்கிற கிறிஸ்த-வத்தை மீட்டு அமைப்போம். பிசாசின் சூழ்ச்சியால், மாந்த அறிவுக் கலப்பால் மாசுபட்டிருக்கும் தெய்வீக உபதேச நெறிகளைத் தூசி தட்டித் தூய்மைப்படுத்துவோம். தேவனுடைய வசனங்கள் உபதேசத்துக்கும், கடிந்து கொள்ளுதலுக்கும், சீர்திருத்தலுக்கும், நீதியைப் படிப்பிப்பதற்கும் போதுமே. (2 தீமோ 3:17)! பின் ஏன் மாந்த அறிவுக்கலப்பு? கூடிப்பேசிக் கொட்டிக் கலந்து முடிவெடுப் போம் வாரீர்!

**E. Z. செல்வநாயகம்**

சுமை சுமந்து சோர்ந்திருப்பவர்களே, எல்லாரும் என்னிடத்தில் வாருங்கள். உங்களை நான் இளைப்பாற்-றுவேன். உங்கள் மேல் என் நுகத்தை ஏற்றுக் கொண்டு என்னிடம் கற்றுக் கொள்ளுங்கள். ஏனெனில் நான் சாந்த-மும், மனத்தாழ்மையும் உள்ளவன். உங்கள் ஆன்மாவிற்கு இளைப்பாறுதல் கிடைக்கும். ஆம். என் நுகம் மென்மை-யானது: என் சுமையும் எளிது.

மத. 11: 28-30

# நினைப்பூட்டி எழுதுகிறேன்

''பிரியமானவர்களே, இந்த இரண்டாம் நிருபத்தை இப்பொழுது உங்களுக்கு எழுதுகிறேன்.

பரிசுத்த தீர்க்கதரிசிகளால் முன் சொல்லப்பட்ட வார்த்தைகளையும் இரட்சகராயிருக்கிற கர்த்தருடைய அப்போஸ்தலராகிய எங்களுடைய கட்டளைகளையும் நீங்கள் நினைவு கூரும்படி இந்த நிருபங்களினால் உங்கள் உண்மையான மனதை நினைப்பூட்டி எழுதுகிறேன்'' என்ற அப்போஸ்தலனாகிய பேதுரு கூறுகிறார். (2 பேதுரு 3:1-2).

நீங்கள் கள்ளப் போதகங்களினால் இழுப்புண்டு போகாதபடிக்கு உங்களுக்கு நினைவூட்டும் நோக்கத்தோடு முன்பு உங்களுக்குக் கற்றுக் கொடுத்ததையே மீண்டும் எழுதுகிறேன் என்று கூறுகிறார். அநேக கள்ளப் போதகங்களின் விளைவுகளைக் கோடிட்டுக் காட்டி விட்டு இறுதியாக, ''ஆதலால் பிரியமானவர்களே, இவைகளை முன்னமே நீங்கள் அறிந்திருக்கிறபடியால் அக்கிரமக்காரருடைய வஞ்சகத்திலே நீங்கள் இழுப்புண்டு உங்கள் உறுதியிலிருந்து விலகி விழுந்து போகாதபடிக்கு எச்சரிக்கையாயிருந்து நம்முடைய கர்த்தரும் இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவின் கிருபையிலும், அவரை அறிகிற அறிவிலும் வளருங்கள். அவருக்கு இப்பொழுதும் என்றென்றைக்கும் மகிமையுண்டாவதாக, ஆமேன்'' என்று முடிக்கிறார். (2 பேதுரு 3:17,18).

நாம் ஒரு காரியத்தைக் கற்கிறோம். ஆனால் அதை அடிக்கடி புழக்கத்துக்குக் கொண்டு வராமையாலும் அடிக்கடி அதைத் திருப்பிப் பார்ப்பதற்கு வாய்ப்பில்லாமையாலும் மறந்து போகிறோம். அப்படிப்பட்ட நிலைமையில் யாராவது ஒருவர் அதை ஞாபகப்படுத்தினால் ஆமாம், ஆமாம் என்று நினைவுப்படுத்திக் கொள்ளுவோம். அல்லது ஏதாவது ஒரு தேவையை முன்னிட்டு, அதைத் தேடிக் கண்டுபிடித்துத் தூசி தட்டித் திறந்து வாசித்து மீண்டும் நினைவுக்குக் கொண்டு வருவோம். அதே போல கர்த்தருடைய வசனங்களைக் கேட்டும், கற்றும் அவைகள் சொல்லுகிற நியாயங்களையும் ஏற்றுக் கொண்டு கர்த்தருடைய சித்தத்துக்குக் கீழ்ப்படிந்து ஞானஸ்நானம் பெற்று இரட்சிப்பும் அடைந்திருப்பீர்கள். ஆனால் காலப்போக்கில் அவைகள் மறந்து போயிருக்கலாம். அப்படிப்பட்ட காரியங்களைத் தான் நாம் அறிந்திருக்கிறோமே, அதை மீண்டும் திரும்பத் திரும்பப் படிப்பது வீண் வேலை என்று நாம் அலட்சியப்படுத்தலாம். இதெல்லாம் ஞாயிறுப் பள்ளிச் சிறுவர்-

களுக்கு உரிய காரியம். நமக்குத் தேவையில்லாதது. நாம் என்ன ஐயர் வேலைக்கா போகப் போகிறோம் என்று கூறுவாரும் உண்டு. இப்படிப்பட்ட போக்கு அபாயகரமானது. கள்ளப் போதகர்கள் நம்மை எளிதில் மடக்கி நம்மை தவறான பாதையில் இழுத்துச் சென்று விட ஏதுவாகும்.

வாழ்க்கை என்பது சில அடிப்படைத் தத்துவங்களின் மீது அமைக்கப்பட்டிருக்கிறது. சரீரப் பிரகாரமாக நமக்குப் பசி தாகம் உண்டாகிறது. அதைப் போக்க நாம் வேளா வேளைக்கு உண்கிறோம். தண்ணீர் போன்ற பானங்களைப்பருகுகிறோம். இதை ஒருநாள் செய்து விட்டு பின்னர் பேசாமல் இருந்து விடுகிறோமா? இல்லையே நாள் தோறும், ஒவ்வொரு வேளையும். அதைத் திருப்பித் திருப்பிச் செய்து கொண்டிருக்கிறோம். அதே போல தூக்கம், அதே போல சில தேகாப்பியாசங்கள் தினமும் சில மணி நேரம் தூங்குவதால் இளைப்பாறுதல் கிடைக்கிறது. புதிய தெம்புடன் மீண்டும் வேலை செய்கிறோம். இப்படி யெல்லாம் நாம் செய்யாமற் போனால், ஆரோக்கியம் இழந்து மரித்துப் போவோம். அதே போல ஆன்மாவுக்குரிய ஆவிக்குரிய உணவுகளை நாம் கொடுக்க வேண்டும். அத்தகைய உணவு எது? திருவசனமாகிய களங்கமில்லாத ஞானப்பால் ஆழமான சத்தியங்கள் என்று சொல்லக்கூடிய பலமுள்ள ஆகாரம் (1 பேது 2:3, எபி 5: 14) ஆகவே நாம் அடிக்கடி ஆரோக்கியமான உபதேசங்களை ஞாபகப்படுத்திக் கொண்டே இருக்க வேண்டும். அப்பொழுது தான் கள்ளப் போதகங்களை எதிர்த்துப் போராட முடியும். அதே போல சபைகளில் பிரசங்கங்களும், வேதபாடங்களும் முறைப்படுத்தப்பட்டு தேவனுடைய அனைத்து ஆலோசனைகளும் அடிப்படை சத்தியங்களும் சபையாருக்கு ஞாபகப்படுத்தப்பட வேண்டும். இவைகளெல்லாம் எனக்கு முன் கூட்டியே தெரியும் என்று சொல்லலாம். தெரியும் என்று அவர்கள் சொல்லும் போது ஏதோ கேள்விப்பட்டிருக்கிறோம் என்றே அவர்கள் சொல்லுகிறார்கள். ஆனால் சத்தியத்தின் அடிப்படையில் கள்ளப் போதனைகளை எதிர்க்கவும், அந்தக் குறிப்பிட்ட காரியத்தை வசன ஆதாரத்தோடு மற்றவர்களுக்குப் போதிக்கவும் அவர்களுக்கு நன்றாக ஞாபகம் இருக்குமா? என்பதே கேள்வி.

புதிய அங்கத்தினர்களைப் பொறுத்த வரையில் இப்படிப்பட்ட அடிப்படைச் சத்தியங்கள் அவர்கள் விசுவாசத்தில் ஊன்றிக் கட்டுவதற்கு மிகவும் பயனுள்ளதாக இருக்கும். புதிதாக வரக் கூடிய பார்வையாளர்கள் கூட சத்திய வசனத்தைக் கலப்படமில்லாமல் எளிமையும் செவ்வையுமாகப் போதிக்கிறார்கள் என்று அறிந்து தானும் சுவிசேஷத்துக்கும் கீழ்ப்படியும்படி தூண்டப் படுவார். சிறுவர்களுக்கும், இளைஞர்களுக்கும் கூட இப்படிப்பட்ட

அடிப்படை உபதேசங்கள் தேவை. சிறு வயதிலேயே அவர்கள் சத்தியத்தின் எளிமையையும், எதார்த்தத்தையும் கேட்டு விசுவாசத்தில் வளருவார்கள்.

எடுத்துக்காட்டாக, தேவன் உலகத்தை எப்படிப்படைத்தார் தேவன் மனு மக்கள் மீது வைத்திருக்கும். அன்பின் ஆழம், அவர் நம்மீது பொழியும் கிருபையும் இரக்கமும் எவ்வளவு என்பதையும் அவர்களுக்குச் சதா ஞாபகப் படுத்திக்கொண்டே இருக்க வேண்டும். (ஆதி 1 : 1 , யோவான் 3 : 16 , எபே 2 : 8 - 9) இயேசுவின் வாழ்க்கை வரலாறு, அவர் உலகுக்கு வந்த காரணம், உலகத்தின் பாவங்களை நீக்க அவர் செய்த தியாகம், அவருடைய உயிர்த்தெழுதல், பரமேறின விஷயம் ஆகியவைகளைப் பற்றியெல்லாம் ஒவ்வொரு அங்கத்தினருக்கும் நன்றாகத் தெரிந்திருக்க வேண்டும்.

மேலும் நற்செய்தியையும், அப்போஸ்தலருடைய நடவடிக்கைகளில் குணமாக்கப்பட்டவர்களுடைய சூழ்நிலைகளையும் ஒருவன் இரட்சிக்கப்பட என்ன செய்ய வேண்டும் என்றும் (ஒருவன் இயேசுவை தேவகுமாரன் என்று விசுவாசித்து, தன் பாவங்களை விட்டு, மனந்திரும்பி, இயேசுவைக்கிறிஸ்து என்று அறிக்கையிட்டு, பாவமன்னிப்புப் பெற ஞானஸ்நானம் பெற்றுக் கொள்ள வேண்டும் (ரோமர் 10:9-77 ; மாற்கு 16 : 15 , 16) அதாவது நாம் சொல்லுகிறதையும், நம்புகிறதையும் வசன ஆதாரங்களோடு நிரூபித்துக் காட்டுகிற அளவுக்கு நமக்குத் தெளிவு வேண்டும். அதே போல சபையைப் பற்றியும் தெளிவு இருக்க வேண்டும். கிறிஸ்து சபைக்காகத் தான் ஜீவனை விட்டார் என்றும் (எபே 5 : 27) சபையை நிறுவினது அவர் தான் என்றும், (மத் 16-78) ஒரே ஒரு சபை தான் உண்டென்றும், (எபே 4:1-6) ஒருவன் கர்த்தரை விசுவாசித்துக் கீழ்ப்படிந்தால் சபையில் சேர்த்துக் கொள்ளப்படுவான் என்பதையும் (அப் 2-47) கூட நன்கு அறிந்து இருக்க வேண்டும். சபையின் பெயர் என்ன என்றும் (ரோமர் 16 : 16) கிறிஸ்துவை ஏற்றுக் கொள்கிறவன் எந்தப் பெயரால் அழைக்கப்பட வேண்டும் என்றும் (அப் 11 : 26) கூடத்தெரிந்திருக்க வேண்டும்.

பின்னர் தொழுகை முறையைப் பற்றி வேதாகமம் என்ன கூறுகிறது? நம்முடைய நண்பர்களுக்கு, தேவனால் அங்கீகரிக்கப்படத்தக்க ஆராதனை எப்படி இருக்க வேண்டும்? தொழுகை செய்ய வேண்டிய நாள் எது? ஏன் புதிய ஏற்பாட்டுக் கிறிஸ்தவர்கள் இசைக் கருவிகளை ஆராதனையில் உபயோகிப்பதில்லை? நாம் ஏன் வாரந்தோறும் அப்பம் பிட்கிறோம்? என்ற காரியங்களுக்கு வசன ஆதாரத்துடன் பதில் சொல்லத் தெரிந்திருக்க வேண்டும்.
(யோவான் 4 : 24 ; அப் 20 : 7 ; எபே 5 : 19 ; 1 கொரி 11-ம் அதிகாரம்)

கிறிஸ்தவர்களாகிய நாம் எப்பொழுது பார்த்தாலும் இந்த மூல உபதேசங்களையே போதித்துக் கொண்டிருந்தால் மற்ற விஷயங்களை எப்பொழுது கற்றுக் கொள்வது? என்று ஒரு சாரர் நினைத்துக் கொண்டு மூல உபதேசங்களை அசட்டை செய்து விட்டால் இளம் விசுவாசிகள் ஆவியில் வளர்வதற்கும் புதிதாக வருகிற பார்வையாளர்கள் கிறிஸ்தவத்தின் மூல உபதேசங்களை அறியக் கூடாமற் போய் விடுமே! மார்க்க சம்பந்தமாக விவாதிக்கும் போது தேவனுடைய வசனங்களை ஆதாரமாக அடுத்தடுத்து எடுத்து வைக்க வேண்டுமே! அப்பொழுது தேடிக் கொண்டிருந்தால் கேட்கிறவர்களுக்கு சலிப்புத் தட்டுமே!

நாம் மற்ற பிரிவுக் கூட்டத்தாரைப் போல, யாரோ சொன்னார்கள், போதகருக்குத் தான் இதெல்லாம் தெரிய வேண்டும். எங்களுக்கு அதெல்லாம் தெரிய வேண்டியதில்லை என்று சொல்லுவோமானால் அவர்களுக்கும் புதிய ஏற்பாட்டுக் கிறிஸ்தவர்களுக்கும் என்ன வித்தியாசம்? சகோதரரே ஆரோக்கியமான உபதேசங்களை நினைவில் கொள்வதற்குச் சிறந்தவழி, நீங்கள் சந்திக்கிற மக்களிடம் சத்தியத்தைப் பற்றிப் பேச வேண்டும். நீங்கள் உங்கள் நண்பர்களை அழைத்து வந்தால் கூட, போதனையின் எளிமையையும் தூய்மையையும் சேதவசனம் பேசுகிறதையே பேசுவதையும், அவர்கள் கண்டு அதைப்பாராட்டி, தாங்களும் கிறிஸ்துவை ஏற்றுக் கொள்ள விரும்புவார்கள்.

நாம் கிறிஸ்தவ ஜீவியத்தில் வளர்வதற்கு ஆழமான சத்தியங்கள் அவசியம் என்பது உண்மையே. ஆனாலும் அவ்வப்பொழுது நாம் மூல உபதேசங்களையும் கூட போதிப்பது அவசியம். அவைகள் ஆவிக்குரிய அஸ்திபாரம். அவைகள் நாம் நம்புகிறதையும், செயல் படுத்துகிறதையும் உறுதிப்படுத்தி நமக்கு ஆறுதல் அளிக்கின்றன. நாம் நம்பியிருக்கிற காரியங்களுக்கெல்லாம் அவைகளே அடிப்படை. அவைகள் மனிதனுக்கு ஆண்டவர் எவ்வளவு முக்கியமானவர், அவசியம் ஆனவர் என்றும், நாம் அடிப்படை சத்தியத்தை மற்றவர்களுக்குப் போதித்து இரட்சிப்புக்குள் வழி நடத்த வேண்டியது எவ்வளவு அவசியம் என்பதையும் உணர்த்துகின்றன. மாந்த உலகம் அனைத்தும் இரட்சிக்கப்படும் வரையில் இந்தத் தேவை முடிந்து போயிற்று என்று நாம் சொல்லவே முடியாது.

J. C. சோட்

# பெண்களின் நிலையைப் பற்றி வேதாகமம் கூறுவது யாது ?

அ) ஒரு பெண்ணின் ஆத்துமா, ஒரு ஆணின் ஆத்துமாவை விட குறைவான மதிப்பு உடையதா? இல்லை.

''ஏனெனில் கிறிஸ்து இயேசுவின் மீது வைத்த விசுவாசத்தின் வழியாய் நீங்கள் அனைவரும் கடவுளின் மக்களாய் இருக்கிறீர்கள். எவ்வாறெனில், கிறிஸ்துவுக்குள் ஞானஸ்நானம் பெற்ற நீங்கள் எல்லாரும் கிறிஸ்துவை அணிந்து கொண்டீர்கள். இனி யூதன் என்றும், கிரேக்கன் என்றும் இல்லை; அடிமையென்றும் உரிமைக் குடிமகன் என்றும் இல்லை; ஆணென்றும் பெண்ணென்றும் இல்லை; கிறிஸ்து இயேசுவுக்குள் நீங்கள் அனைவரும் ஒன்றே'' என்று கலாத்தியருக்கு எழுதின நிருபத்திலும், (கலா 3:26-28) பிலிப்பியருக்கு எழுதும் போது எயோதியாள், மற்றும் சிந்திக்கேயாள் என்ற இரு சகோதரிகளுடைய பெயர்கள் ஜீவ புஸ்தகத்தில் எழுதியிருக்கிறது என்றும் பவுல் கூறுகிறார். (பிலி 4:2-3)

ஆ) பின் எந்த அர்த்தத்தில் பெண்கள்பலவீன பாண்டங்கள் என்று வேதாகமம் கூறுகிறது? (1 பேதுரு 3:7) நிச்சயமாக ஆவிக்குரிய விஷயங்களில் அல்ல. அவர்களும் நித்திய ஜீவனாகிய கிருபையைச் சுதந்தரித்துக் கொள்ளுவார்கள் என்று கீழே சொல்லப்பட்டிருக்கிறதைக் கவனியுங்கள். சொல்லப்போனால் திருவசனத்துக்கு கீழ்படிவதிலும், சத்தியத்தின்படி நடப்பதிலும் பெண்களே சிறந்த முன்மாதிரிகள் (1 பேதுரு 3 1-2) தீமோத்தேயுவின் தாயாரும் பாட்டியும் (2 தீமோ 1:5) லாசருவின் சகோதரிகள் மார்த்தாள், மரியாள், ஆஸ்தியால் ஊழியம் செய்த கூசாவின் மனைவி யோவன்னாள் (லூக் 8:2,3) இப்படி எத்தனையோ பேர், இங்கே பலவீனமான பாண்டம் என்று பேதுரு குறிப்பிடுவது' சரீர பலவீனத்தைத்தான். ஆவிக்குரிய பலவீனத்தை அல்ல.

இ) கணவன் மனைவிக்குத் தலையாயிருக்கிறான் (எபே 5: 23) ஆகவே மனைவி கீழ்ப்படிந்திருப்பது அவசியமாகிறது. (எபே 5:22) கொலேசேயர் 3:18,19 வசனப்பகுதியும் இதையே கூறுகிறது. அப்படியானால் பரிசுத்த ஆவியானவர் பெண்களை இரண்டாம் தர பிரஜை என்கிறாரா? அப்படி இல்லை. கீழ்ப்படியுங்கள் என்று இக்கட்டத்தில் பெண்களுக்குச் சொல்லப்பட்டிருப்பது தேவனுடைய சிருஷ்டிப்பின் படி நியாயமானதே. தேவனுடைய திட்டத்தில் ஒவ்வொருவரும் ஏதாவது ஒரு கட்டத்தில் கீழ்ப்படிந்திருக்க வேண்டும் என்று அறியலாம்.

சபையானது கிறிஸ்துவுக்குக் கீழடங்கியிருக்கிறது. (எபே 5:24) ஆண்களுக்கும் "சகோதரரே, இப்படிப் பட்டவர்களுக்கும் (பரிசுத்தவான்களுக்கு ஊழியம் செய்யும் படிக்கு தங்களை ஒப்புவித்தவர்களுக்கு) உடன் வேலையாட்களாய்ப் பிரயாசப்படுகிற மற்ற யாவருக்கும் நீங்கள் கீழடங்கியிருக்க வேண்டும். (I கொரி 16:16). இளைஞர்களுக்கும் இக் கட்டளை உண்டு." இளைஞரே, மூப்பருக்கு அடங்கியிருங்கள். நீங்கள் எல்லாரும் ஒருவருக்கொருவர் அடங்கியிருந்து மனத் தாழ்மையை அணிந்து கொள்ளுங்கள்" (I பேதுரு 5:5) மேலும், "தெய்வ பயத்தோடே ஒருவருக்கொருவர் அடங்கியிருங்கள்." எபே (5:21) என்ற கட்டளைகளில் ஆண், பெண், சிறுவர், மனைவி, கணவன், அதிகாரி வேலைக்காரர் முதலான சகலரும் அடங்கியிருக்கின்றனர் என்று அறிவோமாக. ஏன்? நமது ஆண்டவராகிய இயேசு பிதாவாகிய தேவனுக்கு கீழ்ப்படிந்திருந்தாரே. (பிலி 2:8), (எபி 5:8)

ஆகவே, சகோதரிகள் தங்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் இச் சிறப்புக் கட்டளையை தங்கள் மீது ஆண் வர்க்கத்தால் திணிக்கப்பட்ட அடிமை சாசனம் என்று முறு முறுக்காமல் கர்த்தரால் அவருடைய பிரஜைகளுக்குக் கொடுக்கப்பட்ட பல்வேறு கட்டளைகளைப் போன்று இது மனைவிமார்களுக்குக் கொடுக்கப்பட்ட சிறப்புக் கட்டளை என்று அறிந்து மனமுவந்து ஏற்றுக் கொள்ள வேண்டும்.

(ஈ) இக்கட்டளையைக் கணவன்மார்கள் தங்கள் மனைவிமார்களைக் கொடுமைப்படுத்துவதற்கு தேவன் அனுமதியளித்திருக்கிறார் என்று எண்ணி மனைவிகளை அடிமைகளாக நடத்தலாமா?

கூடவே கூடாது. கணவனுக்கு அடங்கி நடக்க வேண்டும் என்பது மனைவிமார்களுக்கு எப்படிச் சிறப்புக் கட்டளையோ, அதற்கு எவ்விதத்திலும் குறைவில்லாத ஒரு சிறப்புக்கட்டளை ஆண்களுக்கு உண்டு. "உங்களில் மனைவிகளில் அன்பு கூறுங்கள்". கிறிஸ்து சபையில் அன்பு கூர்ந்து அதற்காகத் தம்மைத் தாமே ஒப்புக் கொடுத்ததைப் போல புருஷர்களும், மனைவிகளில் அன்பு கூற வேண்டும். (எபே 5:25-28) தங்கள் மனைவிகளைச் சொந்தச் சரீரங்களாகப் பாவித்து, தங்களைப் போஷித்து காப்பாற்றுகிறது போல, அவர்களை நேசித்துப் போஷித்துக் காப்பாற்ற வேண்டும். (எபே 5:29)

கணவனின் இந்த தெய்வீக அன்பும், "மனைவி கணவனிடத்தில் அடங்கியிருத்தலும்" சந்திக்கும் போது, அது மோட்சமே பூமிக்கு இறங்கி வந்ததற்கு ஒப்பாகும்.

(உ) ஒரு ஸ்திரீ, ஆண்களும் கலந்துள்ள சபைக் கூட்டத்தைத் தலைமை தாங்கி நடத்தலாமா?

சபைகளில் உங்கள் ஸ்திரீகள் பேசாமலிருக்க கடவர்கள். பேசும்படி அவர்களுக்கு உத்தரவில்லை. அவர்கள் அமர்ந்திருக்க வேண்டும். அவர்கள் ஒரு காரியத்தைக் கற்றுக் கொள்ள விரும்பினால், வீட்டிலே தங்கள் புருசரிடத்தில் விசாரிக்க கடவர்கள். ''ஸ்திரீகள் சபையில் பேசுகிறது அயோக்கியமாயிருக்குமே'' என்றும் (I கொரி 14 : 34, 35) ஸ்திரீயானவள் எல்லாவற்றிலும் அடக்கமுடையவளாயிருந்து அமைதலோடு கற்றுக் கொள்ளக் கடவள். உபதேசம் பண்ணவும், புருஷன் மேல் அதிகாரம் செலுத்தவும், ஸ்திரீயானவருக்கு நான் உத்தரவு கொடுக்கிறதில்லை. அவன் அமைதலாயிருக்க வேண்டும். (I தீமோ 2 : 11, 12) என்றும் வேதம் கூறுகிறது. அப்படியிருக்க தலைமை ஏற்பது என்பது எப்படி நியாயமாகும்?

(ஊ) ஒரு ஸ்திரீ சபையில் எப்படிப்பட்ட பங்கு வகிக்கலாம் என்று வேத ஆதாரத்தோடு கூறுவீர்களா?

பொதுவான ஆராதனைக் கூட்டங்களில் கலந்து கொள்ளத் தடையொன்றுமில்லை. எல்லா அம்சங்களிலும் கலந்து கொள்ளலாம். ஆனால் வழி நடத்த முடியாது. பின்பற்றலாம். உதாரணமாகப் பாட்டுப்பாடலாம். (கொலோ 3:16) தங்கள் விசுவாசத்தை அறிக்கையிடலாம். ஒரு கேள்வி கேட்கலாம். பதிலும் பெறலாம். (அப் 5 : 8)

(எ) அப்படியானால் ஒரு ஸ்திரீக்குப் போதிக்கும் வாய்ப்பே இல்லையா?

ஏன் இல்லை? முதிர்வயதுள்ள ஸ்திரீ பாலிய ஸ்திரீகளுக்குப் போதிக்க வேதம் அனுமதியளிக்கிறது. (தீத்து 2:3-5) வீட்டிலும், பெண்கள் மட்டும் அடங்கிய கூட்டத்திலும் போதிக்கலாம். சிறுவர்களுக்குப் போதிக்கலாம். கணவன் ஒருவருக்கு போதிக்கும் போது உடனிருந்து ஒத்தாசை செய்யலாம். (அப் 18:26). ஆண்களோடு சேர்ந்து ஊழியத்திற்கு உதவியாக இருக்கலாம் (பிலி 4:3) மேடையிலேறிப் பிரசங்கம் பண்ணுவது தான் ஊழியம் என்று அநேகர் தவறாக நினைத்துக் கொண்டு தேவனுடைய திட்டத்தை பழித்துக் கூறி மீறி வருகிறார்கள். இது அபாயகரமான போக்கு. இப்படி நினைத்துக் கொண்டு, ஊழியக் காரியாகிய நம்முடைய சகோதரி பெபேயாளைக் (ரோ 16:1) சுட்டிக் காட்டுவார்கள். ஊழியம் என்றால் தொண்டு அல்லது சேவை என்று பொருள். அது எந்தத்திருப்பணியையும் (கூட்டுவது உட்பட) குறிக்கும். தேவ எத்தனத்துக்கு எதிர்த்து நின்று கோராகுவின் நிலையை அடைய வேண்டாம். தேவன் தாய்க்குலத்தை வெறுக்கவில்லை. தவறாக எண்ணிக் கொண்டு மயங்காதீர்கள். உற்சாகமாக உங்களுக்குக் கொடுக்கப்பட்டுள்ள ஸ்தானத்தில் திருப்தியடையுங்கள்.

# இனிப் புறங்கூறுதல் வேண்டாம்

1. புறங்கூறுதல் பிசாசின் குணம். Diabolos என்கிற கிரேக்க பதத்துக்கு பிசாசு என்று பொருள். அதற்குப் புறம் கூறு-கிறவன் என்று பொருள் உண்டு.

(அ) அதை தேவன் வெறுகிறார். நீதி 6:19.

(ஆ) அதைத் தடை செய்கிறார். லேவி 19 : 16.

(இ) அது ஒரு கிறிஸ்தவன் விட்டுவிட வேண்டிய துர்க்குணங்களில் ஒன்று. எபே 4: 31.

2. ஒருவனைப் புறங்கூறத் தூண்டுவது யாது?

அ. அன்புத் தாழ்ச்சி கலா. 5 : 14, 15

ஆ. பொறாமை, எண். 12 : 1-2

இ. இதன் தொடர்பான மற்ற இழி குணங்களின் பட்டியல். ரோமர், 1 : 29-31, I தீமோ 5 : 13, I தீமோ, 6 : 4.

3. புறங்கூறுவதினால் உண்டாகும் விளைவுகள்.

அ. இதயத்தைப் புண்படுத்துகிறது. நீதி 18 : 8, 26 : 22.

ஆ. நண்பர்களைப் பிரிக்கிறது. நீதி 16 : 28.

இ. சண்டைகளுக்குக் காரணமாக இருக்கிறது. நீதி 25: 23, 26 : 20.

ஈ. ஆவிக்குரிய வளர்ச்சிக்குத் தடையாயிருக்கிறது. I பே. 2 : 1,2, சங் 15 : 3.

உ. சபை வளர்ச்சிக்கு இடைஞ்சலாக இருக்கிறது. 2 கொ. 12 : 20,21.

4. பழைய ஏற்பாட்டுச் சம்பவம் ஒன்றிலிருந்து படிப்பினைகள். எண். 12 : 1-16.

அ. மீரியாமும், ஆரோனும் மோசேயைப் புறம் கூறினார்கள்.

ஆ. மோசே அல்ல. கர்த்தர் அதைக் கேட்டார். வ. 2.

இ கர்த்தருடைய கோபம் மூண்டது. வ. 9.

ஈ. தேவமகிமை விலகிப்போனது. வ. 10.

உ. மீரியாம் குஷ்டரோகி ஆனாள். வ. 10.

ஊ. மீரியம் சபையின் நடுவிலிருந்து விலக்கப்பட்டாள். வ. 15.

எ. இஸ்ரவேலின் மக்கள் பயணம் தாமதப்பட்டது. வ. 15.

5. புறங்கூற வேண்டும் என்ற சபலம் உங்களுக்குத் தோன்றினால், உங்களை நீங்களே கேட்க வேண்டிய கேள்விகள்.

(அ) அதே புறங்கூறும் சம்பவம் எனக்கெதிராகப் பிரயோகிக்கப் பட்டால் என்னுடைய உணர்வுகள் எப்படியிருக்கும்?

(ஆ) அது கிறிஸ்தவ அறமாகுமா?

(இ) அது தேவையா?

6. புறங்கூறுகிற ஒருவன் தங்களிடம் வந்தால் நீங்கள் அவனிடம் கேட்க வேண்டிய கேள்விகள்.

(அ) நீங்கள் அந்தக் கதையை என்னிடம் சொல்வதால் எனக்கு ஏதாவது நன்மை உண்டா?

(ஆ) என்னிடமோ, பிறரிடமோ அதைச் சொல்வதால் உங்களுக்கு எந்த விதத்தில் நன்மை?

(இ) அதனால் சம்பந்தப்பட்ட நபர் பயனடைவாரா?

7. உங்கள் மீது ஒருவர் புறங்கூறினால் :

அ. தடுக்க வேண்டாம்.

ஆ. தாக்க வேண்டாம்.

இ. ஆசீர்வதியுங்கள்.

8. புறங் கூறுதலுக்குக் கடும் தண்டனை உண்டு.
சங். 50 : 20, 21 ; நீதி 6 : 12-15,
ரோமர் 1 : 30—32, 2 : 1,

9. ஆகையால் அதைவிட நீங்கள் ஏன் இப்படிச் செய்யக்கூடாது?

(அ) சம்பந்தப்பட்ட நபர் தனிமையில் இருக்கும் போது அவரிடமே சுட்டிக் காட்டுங்கள். மத் 18 : 15.

(ஆ) குற்றங்களை ஒருவருக்கொருவர் அறிக்கையிட்டு ஒருவருக்காக ஒருவர் ஜெபம் பண்ணுங்கள். யாக் 5 : 16,

(இ) சாந்தமுள்ள ஆவியோடே அவனைச் சீர் பொருந்தப்பண்ணுங்கள், கலா. 6 : 1

# கிறிஸ்துவைப் பின் பற்றி . . .

''சபை'' என வேதாகமத்தில் மொழியாக்கம் செய்யப் பட்டுள்ள 'எக்கலிசியா' எனும் கிரேக்க வார்த்தையின் உண்மை-யான பொருள் "தேர்ந்தெடுக்கப்பட்ட மக்களின் குழு" என்பதாகும். சபை என்றால் ''ஆராதனைக் கூடம்'' என அர்த்தம் கூறுகிறது. அகராதி; ஏனெனில் பெரும்பாலான மக்கள் அவ்வித அர்த்தத்திலே தானே சபையை ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள்! ஆனால் ஆரம்ப காலத்தில் சபையின் அர்த்தம் அதுவல்ல என்பதை, கிறிஸ்து விவாகரத்து பற்றி (மத். 19 : 8) கூறியதிலிருந்து தெரிந்து கொள்ளலாம். 'தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் குழுவாக இருப்-பதால், அதாவது : பாவ உலகிலிருந்து மீட்கப்பட்டு தேவ-குமாரனின் அரசில் இணைக்கப்பட்டுள்ளபடியால் (மத். 16 : 18, 19; கொலே. 1 :13), கிறிஸ்தவர் என அழைக்கப்படும் மக்களைக் கொண்டதாக கிறிஸ்துவின் சபை உள்ளது. (அப். 11 : 26 ; 1 பேதுரு 4 : 16). கிறிஸ்துவின் அடிச்சுவட்டைப் பின் பற்றுவோராக கிறிஸ்தவர்கள் வாழ வேண்டுமென எதிர்பார்க்கப்படுகிறது. (1 பேதுரு 2 : 21).

**கிறிஸ்துவை நோக்கிப் பார்க்கையில் நாம் தெரிந்து கொள்ளுவது யாதெனில் :**

உலகில் வாழ்ந்த போது ஜெபத்திற்கு அவர் அதிக முக்கியத்துவம் அளித்தார் என்பதாகும். தேவனுடைய கட்டளைக்குக் கீழ்ப்படிந்து, ஞானஸ்நானம் பெற்று தண்ணீரிலிருந்து வெளி வந்த போது போது (மத். 3:15, 16) அவர் ஜெபம் செய்தார் என வேதாகமம் கூறுகிறது. (லூக்கா 3 : 21). ஒவ்வொரு காரியத்தை செய்யும் முன்பும் அவர் ஜெபம் செய்தார். இரண்டு சிறு மீன்களையும் ஐந்து ரொட்டித் துண்டுகளையும் கொண்டு ஐயாயிரம் பேருக்கதிக-மானவர்களுக்கு அவர் உணவளித்த போது, அவற்றை பரிமாற தனது சீடர்களிடம் கொடுக்கும் முன்னர் தேவனுக்கு நன்றி சொன்னார் (யோவான் 6 : 11).

மீண்டுமாக, மரித்த லாசரை உயிருடன் எழுப்புகையில், அவரை எழுப்பும் முன்பாக பரலோகப் பிதாவை நோக்கி ஜெபம் செய்தார். (யோவான் 11 : 41), இப்பூமியில் அவர் வாழ்ந்த காலம் முழுவதும், ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் ஜெபம் செய்ய அவர் தவறவில்லை. அவரை சிலுவையில் அறைய காட்டிக்கொடுக்கப் படுவதற்கு சற்று நேரத்திற்கு முன்பு கூட, கெத்செமனே தோட்டத் திலேவி ண்ணகத் தந்தையை நோக்கி, ''என் சித்தத்தின்படி அல்ல, உமது சித்தத்தின்படியே ஆகக்கடவது'' (மத். 26 : 39) என ஜெபித்தார். பின்னர், சிலுவையில் தொங்கிய போதும், ''பிதாவே,

இவர்களை மன்னியும், தாங்கள் செய்கிறது இன்னதென்று அறியாதிருக்கிறார்களே'' (லூக். 23:34) என அவருடைய விரோதிகளுக்காக ஜெபித்தார். இறுதியாக, ''பிதாவே, உமது கைகளில் என் ஆவியை ஒப்புவிக்கிறேன்'' (லூக். 23:46) எனக்-கூறினார். எல்லாசந்தர்ப் பங்களிலும் கிறிஸ்து ஜெபித்ததைப்போல, கிறிஸ்தவர்களாகியநாமும் ஜெபம் செய்யக்கடமைப்பட்டுள்ளோம்.

தன் பிதாவின் விருப்பத்திற்கு கீழ்ப்படிவது, கிறிஸ்து தன் வாழ்வில் முக்கியத்துவம் அளித்த மற்றொரு காரியம். மேலே நாம் வாசித்ததைப் போல, ''என் சித்தத்தின்படி அல்ல, உம்முடைய சித்தத்தின்படியே ஆகட்டும்'' என்பதே அவருடைய வார்த்தை-யாக இருந்தது. ''மரண பரியந்தம், அதாவது சிலுவையின் மரண-பரியந்தமும் கீழ்ப்படிந்தவராகி தம்மைத்தாமே தாழ்த்தினார்'' என பிலிப்பியர் 2:8ம் வசனத்தில் காண்கிறோம். எபிரேயர் 5ம் அதிகாரம் 8,9 வசனங்களின் படி, ''அவர் குமாரனாயிருந்தும் பட்ட பாடுகளினாலே கீழ்ப்படிதலைக் கற்றுக் கொண்டு, தாம் பூரணரான பின்பு, தமக்குக் கீழ்ப்படிகிற யாவரும் நித்திய இரட்சிப்பை அடைவதற்குக் காரணமானார்'' என நாம் காண்கிறோம். ''பர-லோகத்திலிருக்கிற என் பிதாவின் சித்தத்தின் படி செய்கிறவனே பரலோக ராஜ்யத்தில் பிரவேசிப்பானேயல்லாமல், என்னை நோக்கி, ''கர்த்தாவே! கர்த்தாவே! என்று சொல்லுகிறவன் அதில் பிரவே-சிப்பதில்லை'' (மத். 7:21) என கற்பித்தார். எனவே, கிறிஸ்துவை பின்பற்றுவோராகிய நாம் கிறிஸ்துவின் எல்லா கட்டளைகளுக்கும் கீழ்ப்படிய வேண்டும்.

''அவர் தேவனுடைய ரூபமாயிருந்தும், தேவனுக்குச் சம-மாயிருப்பதைக் கொள்ளையாடின பொருளாக எண்ணாமல், தம்-மைத்தாமே வெறுமையாக்கி, அடிமையின் ரூபமெடுத்து, மனுஷர் சாயலானார்'' (பிலிப். 2:6,7). பரலோக ராஜ்யத்தில் பிரவேசிக்க ஒரு குழந்தையைப் போல தன்னை தாழ்த்துகிறவனாக இருக்க வேண்டுமென தன்னை பின்பற்றுவோருக்குக் கற்பித்தார். (மத். 18:3) நித்திய ஜீவனை அடைய வழிதேடி கிறிஸ்துவிடம் வந்த மனிதன், அவரை ''நல்ல போதகரே'' என அழைத்ததைக் கூட ஏற்றுக் கொள்ள மறுக்கும் அளவிற்கு நமது கர்த்தர் அடக்கமுடைய வராக இருந்தார். (மத். 19:16,17), இன்றோ நாம் இங்கு காணும் வேதனையான காரியத்தைப் பாருங்கள்! நற்செய்தியை போதிக்-கிறேன் என உரிமை கொண்டாடும் பலர் தங்களை ''பாஸ்டர்'', ''சங்கைக் குறிய'', ''பாதிரி'', ''குரு'', ''தந்தை'' என்றெல்லாம் பிறர் அழைக்க வேண்டுமென்று விரும்புகின்றனர். (மத். 23:9; சங்கீதம் 111:9). ''உலகமெங்கும் போய் சகல சிருஷ்டிக்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கியுங்கள்'' (மார்க் 16:15) என்ற

கட்டளையுடன் தனது சீடர்களை அவர் அனுப்பு முன்னர், ஒரு பாத்திரத்தில் தண்ணீர் ஊற்றி தனது சீடர்களின் பாதங்களைக் கழுவத் தொடங்கினார். பின்னர், ''நான் உங்களுக்குச் செய்தது போல நீங்களும் செய்ய வேண்டுமென்று உங்களுக்கு மாதிரியைக் காண்பித்தேன்'' (யோவான் 13:5,15) எனக் கூறினார். நமது இரட்சகர் இயேசு கிறிஸ்துவைப் போல தாழ்மை சிந்தையுள்ள-வர்களாக நாம் இல்லாவிட்டால் அவரைப் பின் பற்றுவோராக நாம் இருக்க முடியாது.

கிறிஸ்துவிடமிருந்து நாம் கற்றுக் கொள்ளும் மற்றொரு காரியம், அவர் எப்போதும் மன்னிக்கத் தயாராக இருந்தார் என்-பதாகும். ஒரு சமயம், விபச்சாரத்தில் ஈடுபட்ட ஒரு பெண்ணை சில மதத்தலைவர்கள் பிடித்து வந்து, மோசேயின் கட்டளைப்படி (நியாயப்பிரமாணம்) கல்லால் எறிந்து கொலை செய்ய விரும்பினர். கிறிஸ்துவின் முன் அப் பெண்ணை நிறுத்தி, ''நீர் என்ன சொல்-லுகிறீர்?'' (யோவான் 8:5) என வினவினர். கிறிஸ்து அவர்களை நோக்கிக் கூறினார். ''உங்களில் பாவமில்லாதவன் எவனோ, அவன் தன் முதல் கல்லை அவள் மேல் எறியட்டும்'' (யோவான் 8:7). யாருமே அப் பெண்ணின் மேல் கல் எறியவில்லை ஏன்? அவர்கள் எல்லோருமே பாவிகள் என அவர்களுக்குத் தெரியுமே! கிறிஸ்துவை யும் அப் பெண்ணையும் விட்டு அவர்கள் எல்லோரும் அகன்ற பின்னர், கிறிஸ்து அவளிடம் கூறினார்: ''நானும் உன்னை ஆக்கினைக்குள்-ளாக்கவில்லை. போ, இனி பாவஞ் செய்யாதே'' (யோவான் 8:11). கிறிஸ்து பாவமற்றவர். அவளை தண்டித்திருக்கலாம். ஆனால் அதைச் செய்யவில்லை. ஏனெனில், ஆக்கினைத்தீர்ப்பிட அவர் வரவில்லை. மாறாக, மன்னித்து, இரட்சிக்கவே வந்தார். அவர் வேதனையோடு சிலுவையில் துடித்துக் கொண்டிருந்த போது, அவருடைய எதிரிகள் அவரை கேலியும் கிண்டலும் செய்த போது கூட, அவருடைய பிதாவினிடத்திலே அவர்களை மன்னிக்க வேண்டு-கிறார் என்பதாக லூக்கா 23:24ல் நாம் வாசிக்கிறோம். ''மனிதர்-களுடைய குற்றங்களை நீங்கள் மன்னித்தால், உங்கள் பரம பிதா உங்களையும் மன்னிப்பார். நீங்கள் மனிதர்களுடைய குற்றங்களை மன்னிக்காவிடில், உங்கள் பிதாவும் உங்கள் குற்றங்களை மன்னிக்க மாட்டார். (மத். 6:14,15) என நமது இரட்சகர் கூறியதை கிறிஸ்தவர்களாகிய நாம் எப்போதும் நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும்.

மேலும், கிறிஸ்துவைப் பின்பற்றுவோராக நாம் வா விரும்பினால், அவரைப் போலவே நாமும் எல்லா மக்களையும் நேசிக்க வேண்டும் என்பதை கிறிஸ்துவிடமிருந்து நாம் கற்றுக் கொள்ள வேண்டும் வீழ்ந்து போன மனித சமுதாயத்தின் பால் அவர் செலுத்திய அன்பு அளவற்றதாக இருந்ததால், வானுலகை

விட்டு இறங்கி, மனித உருவெடுத்து, நமது பாவங்களுக்குப் பரிகாரமாக மரிக்கவும் தயாரானார். அவருடைய உயிரைக் கொடுத்து உலகை நேசித்தார். பாவத்திலிருந்து மனிதனை மீட்க அவர் கொடுத்த விலை என்ன தெரியுமா? அவருடைய சொந்த இரத்தம்! உயிர்! (1 யோவான் 2:2 4 : 10). பாவ உலகில் மனிதன் வீழ்ந்து போவதை கிறிஸ்தவர்களாகிய நாம் அலட்சியப் படுத்திக் கொண்டிருக்க முடியாது. இயேசு பரலோகத்தை விட்டு இறங்கி, தம்மைத்தாமே வெறுமையாக்கி, அடிமையின் ரூபமெடுத்து, மனித சாயலாகி (பிலிப் 2:6-8) பாவிகள் பேரில் அவர் அதிக அன்பு செலுத்தியபடியால், வீழ்ந்து போனவர்களைத் தேடி இரட்சிக்க வந்தார். (லூக். 19 : 10). பொறாமை, வெறுப்பு, சண்டை சச்சரவுகள் நிறைந்த இவ்வுலகிற்கு, கிறிஸ்துவின் செய்தியாகிய அன்பு செலுத்துதலையும், சிலுவையின் நற்செய்தியையும், கிறிஸ்தவர்கள் என்ற முறையில் எடுத்துச்சொல்ல வேண்டிய கடமை நமக்கு உண்டு. ‘‘நீங்கள் ஒருவரிலொருவர் அன்பாயிருங்கள்; நான் உங்களில் அன்பாயிருந்தது போல நீங்களும் ஒருவரிலொருவர் அன்பாயிருங்கள் என்கிற புதிதான கட்டளையை உங்களுக்குக் கொடுக்கிறேன். நீங்கள் ஒருவரிலொருவர் அன்புள்ளவர்களாயிருந்தால், அதனால் நீங்கள் என்னுடைய சீடர்களென்று எல்லோரும் அறிந்து கொள்வார்கள்.’’ (யோவான்13 : 34, 35) என நமது தேவன் கூறினார்.

கிறிஸ்து தாழ்மை, அன்பு, இரக்கம் ஆகிய பண்புகளை உடையவராக இருந்த போதிலும், அதே சமயத்தில் அவர் தைரியமுள்ள மனிதராகவும், கொள்கையை விட்டுக் கொடுக்காதவராகவும் இருந்தார். அவருடைய பிதாவினுடைய வீட்டை (தேவாலயத்தை) ஒரு வியாபார ஸ்தலமாக அவர்கள் மாற்றிய போது அவரால் அதைப் பொறுத்துக் கொள்ள முடியவில்லை. தேவாலயத்தில் ஆடுகள், மாடுகள், புறாக்கள் போன்றவைகளை விற்கிறவர்களையும், காசுக்காரர் உட்கார்ந்திருக்கிறதையும் கண்டு, கயிற்றினால் ஒரு சவுக்கை உண்டு பண்ணி, அவர்கள் யாவரையும் ஆடு மாடுகளையும் தேவாலயத்திற்குப் புறம்பே துரத்தி விட்டு, காசுக்காரர்களுடைய காசுகளைக் கொட்டி, பலகைகளைக் கவிழ்த்துப் போட்டு, புறா விற்கிறவர்களை நோக்கி இவைகளை இவ்விடத்திலிருந்து எடுத்துக் கொண்டு போங்கள்; என் பிதாவின் வீட்டை வியாபார வீடாக்காதிருங்கள் என தைரியமாகச் சொன்னார். (யோவான் 2 : 14-16). கிறஸ்துவைப் பின் பற்றும் நாமும் அவரைப் போல தைரியமாக செயல்பட வேண்டும். பாவங்கள், உலக காரியங்கள், தவறுகள், கிறிஸ்தவத்துக்குள் பிரிவினைகள், பிளவுகள், இவை யாவற்றையும் எதிர்த்து நாம் தைரியமாக குரல்

கொடுக்க வேண்டும். தவறுகளைச் சாடிப் பேசவும் எழுதவும் தவறக் கூடாது. அதே சமயம், கிறிஸ்துவின் அன்பை போதிக்கவும், போதிப்பதை நடைமுறையில் செயல்படுத்தவும் வேண்டும். பரிசுத்தவான்களுக்கு ஒரு தடவை ஒப்புக் கொடுக்கப்பட்ட விசுவாசத்திற்காக தைரியமாக போரிட வேண்டியதும் அவசியமாகும் (யூதா 3). இதே காரியங்களைத் தானே கடந்த பல வருடங்களாக எமது பத்திரிக்கைகள் மூலமாக நாம் செய்து கொண்டு வருகிறோம். கர்த்தருக்குச் சித்தமானால், இதே பணியை வரும் காலங்களிலும் தொடர்ந்து செய்து வருவோம். புதிய ஏற்பாட்டு கிறிஸ்தவத்திற்கு திரும்பிச் செல்லவும், வேதாகமம் எதைப் பேசுகிறதோ அதைப் பேசி, அது பேசாத எதையும் நாமும் பேச மாட்டோம் என நாங்கள் ஏற்றுக் கொண்ட பணியில் எங்களோடு இணைந்து செயல்பட உங்கள் யாவரையும் அன்புடன் அழைக்கிறோம்.

மனிதன் இயற்றிய மதச் சட்ட திட்டங்கள், கோட்பாடுகள், சடங்குகள் இவை யாவற்றையும் உதறித்தள்ளி விட்டு, கிறிஸ்துவை மட்டுமே பின்பற்றி நடப்பது நித்திய ஜீவனை அடைய உத்திரவாதமான, பாதுகாப்பான வழி. பிற வழிகள் யாவும் கானல் நீரைப் போன்றவை. ஏமாந்து போகாதீர்கள் உங்கள் இரட்சிப்பில் அக்கரை கொண்டு அன்புடன் அழைக்கிறோம். வாருங்கள் கிறிஸ்துவைப் பின்பற்றி சரியான பாதையில் நடப்போம்.

தமிழில் : **S.S. ராஜன்**

**ஆன்மா ஈடேற தாகமாயிருக்கிறவர்களுக்கு அழைப்பு**

ஓ, தாகமாயிருக்கிறவர்களே! நீங்கள் எல்லாரும் தண்ணீரண்டைக்கு வாருங்கள், பணமில்லாதவர்களே நீங்கள் வந்து, வாங்கிச் சாப்பிடுங்கள்; நீங்கள் வந்து பணமுமின்றி விலையுமின்றி திராட்சை ரசமும், பாலும் கொள்ளுங்கள்.

நீங்கள் அப்பம் அல்லாததற்காகப் பணத்தையும், திருப்தி செய்யாத பொருளுக்காக உங்கள் பிரயாசத்தையும் செலவழிப்பானேன்? நீங்கள் எனக்குக் கவனமாய்ச் செவி கொடுத்து நலமானதைச் சாப்பிடுங்கள். அப்பொழுது உங்கள் ஆத்துமா கொழுப்பான பதார்த்தத்தினால் மகிழ்ச்சியாகும். ஏசாயா 55:1-2

# தெரிந்து கொள்ளுங்கள்

பழைய ஏற்பாட்டு புத்தகங்களின் விவரங்கள்

| வ. எண் | நூலின் பெயர் | மொத்த அதிகாரங்கள் | நூலின் மையக் கருத்து |
|---|---|---|---|
| 1 | ஆதியாகமம் | 50 | உலகத்தோற்றமும் எபிரேய நாட்டின் உதயமும். |
| 2 | யாத்திராகமம் | 40 | எபிரேய நாட்டுடன் யெகோவாவின் உடன்படிக்கை. |
| 3 | லேவியராகமம் | 27 | எபிரேய நாட்டின் அரசியல் சாசனமும், சட்ட திட்டங்களும் |
| 4 | எண்ணாகமம் | 36 | வாக்கு கொடுக்கப்பட்ட நாட்டை நோக்கி நெடிய பயணம் |
| 5 | உபாகமம் | 34 | எபிரேய நாட்டின் அரசியல் சாசனமும், சட்ட திட்டங்களும் |
| 6 | யோசுவா | 24 | கானான் தேசத்தை சுதந்தரித்துக் கொள்ளுதல் |
| 7 | நியாயாதிபதிகள் | 21 | வாக்கு கொடுக்கப்பட்ட கானான் தேசத்தில் 300 ஆண்டு வாழ்க்கை |
| 8 | ரூத் | 4 | பூவுலகுக்கு மேசியா வருகைதர ஆயத்தப்படுத்தப்பட்ட தாவீதின் வம்சவழி ஆரம்பம் |

| வ. எண் | நூலின் பெயர் | மொத்த அதிகாரங்கள் | நூலின் மையக் கருத்து |
|---|---|---|---|
| 9 | 1 சாமுவேல் | 31 | அரசர்கள் ஆளுகை ஆரம்பம் |
| 10 | 2 சாமுவேல் | 24 | தாவீது அரசனின் ஆட்சி - இஸ்ரவேலின் பொற்காலம் |
| 11 | 1 இராஜாக்கள் | 22 | நாட்டுப் பிரிவினை |
| 12 | 2 இராஜாக்கள் | 25 | உடைந்த அரசுகளின் வரலாறு. |
| 13 | 1 நாளாகமம் | 29 | தாவீது அரசனின் ஆட்சி - இஸ்ரவேலின் பொற்காலம் |
| 14 | 2 நாளாகமம் | 36 | தென் நாட்டின் வரலாறு |
| 15 | எஸ்றா | 10 | சிறையிருப்பிலிருந்து திரும்பி வருதல். |
| 16 | நெகேமியா | 13 | எருசலேம் திரும்பக் கட்டப்படுதல் |
| 17 | எஸ்தர் | 10 | இஸ்ரவேலர் கூண்டோடு அழிக்கப்படுவதிலிருந்து தப்புதல் |
| 18 | யோபு | 42 | சகிப்புத் தன்மையும், பொறுமையும். |
| 19 | சங்கீதம் | 150 | இஸ்ரவேலின் தேசிய கீதங்கள் |
| 20 | நீதிமொழிகள் | 31 | ஞானி சாலொமோனின் பொன்மொழிகள் |
| 21 | பிரசங்கி | 12 | வாழ்வே மாயம் |
| 22 | உன்னதப்பாட்டு | 8 | சாலொமோனின் இலக்கியப் புலமை. |
| 23 | ஏசாயா | 65 | மேசியா தீர்க்கன் முன்னுரைத்தவை. |
| 24 | எரேமியா | 52 | எருசலேமைக் காப்பாற்ற இறுதி முயற்சி. |

| | | | |
|---|---|---|---|
| 25 | புலம்பல் | 5 | எருசலேமின் அழிவைப் பற்றிய துயர கீதம். |
| 26 | எசேக்கியேல் | 48 | நானே தேவன் என்று அவர்கள் அறிவார்கள். |
| 27 | தானியேல் | 12 | பாபிலோனில் யெகோவாவின் மெய் பக்தன் |
| 28 | ஓசியா | 14 | இஸ்ரவேலர் யெகோவாவை மறுதலித்தல் |
| 29 | யோவேல் | 3 | பரிசுத்த ஆவியின் யுகத்தைப் பற்றிய முன்னுரைப்பு. |
| 30 | ஆமோஸ் | 9 | தாவீதின் கடைசி கால உலக ஆட்சி. |
| 31 | ஒபதியா | 1 | ஏதோமின் அழிவு. |
| 32 | யோனா | 4 | நினிவே நகரத்துக்கு இரக்க தூது |
| 33 | மீகா | 7 | மேசியாவின் பிறப்பிடம் பெத்லகேம் |
| 34 | நாகூம் | 3 | நினிவேயின் அழிவு |
| 35 | ஆபகூக் | 3 | விசுவாசத்தால் நீதிமான் பிழைப்பான் |
| 36 | செப்பனியா | 3 | தேவனுடைய பிள்ளைகளின் எதிர்கால சிறப்பு. |
| 37 | ஆகாய் | 2 | தேவாலயம் புதுப்பிக்கப்படுதல் |
| 38 | சகரியா | 14 | தேவாலயம் புதுப்பிக்கப்படுதல். |
| 39 | மல்கியா | 4 | கீழ்ப்படியாமையின் பிள்ளைகளுக்கு இறுதிச் செய்தி. |

## புதிய ஏற்பாட்டு புத்தகங்களின் விபரங்கள்

| வ. எண் | நூலின் பெயர் | மொத்த அதிகாரங்கள் | நூலின் மையக் கருத்து |
|---|---|---|---|
| 1 | மத்தேயு | 28 | மேசியாவாகிய இயேசு |
| 2 | மாற்கு | 16 | இயேசு — அற்புதமானவர் |
| 3 | லூக்கா | 24 | இயேசு — மனுஷ குமாரன் |
| 4 | யோவான் | 21 | இயேசு — தேவனுடைய குமாரன் |
| 5 | அப்போஸ்தலருடைய நடபடிகள் | 28 | சபையின் தோற்றமும் வளர்ச்சியும் |
| 6 | ரோமர் | 16 | கிறிஸ்துவின் பணி மாட்சி |
| 7 | 1 கொரிந்தியர் | 16 | சபையில் தோன்றும் பல்வேறு பிரச்சனைகள் |
| 8 | 2 கொரிந்தியர் | 13 | அப்போஸ்தலப் பட்டத்தைக் குறித்து பவுலின் தன்னிலை விளக்கம் |
| 9 | கலாத்தியர் | 6 | நியாயப்பிரமாணத்தின் மூலமாக அல்ல, கிருபையினால் |
| 10 | எபேசியர் | 6 | சபையின் ஒருமைப்பாடு |
| 11 | பிலிப்பியர் | 4 | ஒரு சுவிசேஷகனின் குரல் |
| 12 | கொலோசெயர் | 4 | இயேசுவின் தெய்வீகத் தன்மை |

| | | | |
|---|---|---|---|
| 13 | 1 தெசலோனிக்கேயர் | 5 | கர்த்தரின் இரண்டாம் வருகை |
| 14 | 2 தெசலோனிக்கேயர் | 3 | கர்த்தரின் இரண்டாம் வருகை |
| 15 | 1 தீமோத்தேயு | 6 | எபேசு பட்டணத்து ஊழியம் |
| 16 | 2 தீமோத்தேயு | 4 | பவுலின் இறுதி அறிவுரைகள் |
| 17 | தீத்து | 3 | கிரேத்தா தீவு சபை ஊழியம் |
| 18 | பிலேமோன் | 1 | ஓடிப்போன வேலைக்காரன் உண்மையுள்ள சகோதரனாக உருமாற்றப்படல் |
| 19 | எபிரெயர் | 13 | இயேசு - புதிய உடன்படிக்கையின் மத்தியஸ்தர் |
| 20 | யாக்கோபு | 5 | கிறிஸ்தவமார்க்கம் - செயல்முறை கண்ணோட்டம் |
| 21 | 1 பேதுரு | 5 | துன்புறுத்தப்பட்ட சபைக்கு ஆறுதல் நிருபம் |
| 22 | 2 பேதுரு | 3 | மறுதலித்தலைப் பற்றிய தீர்க்க உரை |
| 23 | 1 யோவான் | 5 | அன்பின் மாட்சி |
| 24 | 2 யோவான் | 1 | கள்ளப் போதகர்களைப் பற்றிய எச்சரிக்கை |
| 25 | 3 யோவான் | 1 | யோவானுடைய தொண்டர்கள் நிராகரிக்கப்படல் |
| 26 | யூதா | 1 | சீக்கிரமாய் சம்பவிக்கப் போகிற மறுதலிப்பு |
| 27 | வெளிப்படுத்தின விஷேசம் | 22 | கிறிஸ்துவின் இறுதி வெற்றி |

# கிறிஸ்தவத்துக்கு உடனடித் தேவை-ஒற்றுமை

கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை வழிபடும் நன்மக்களே!

கிறிஸ்தவ மார்க்கத்தின் நாயகர் இயேசு கிறிஸ்துவும் அவர் தம் திருத்தொண்டர்களில் முதன்மையானவருமாகிய அப்போஸ்தலன் பவுல் அடியாரும், கிறிஸ்தவ அறத்தில் பற்றும் உறுதிப்பாடும் உள்ள அனைவரும் ஒற்றுமையாக இருக்க வேண்டும். என்று மிகவும் உருக்கத்தோடு வலியுறுத்துகின்றனர். யோவான் 17 : 20-23 :1 கொரி 1 : 10-13; ரோமர் 15 : 5 : 6.

## ஏன் அப்படி வற்புறுத்துகிறார்கள்?

அப்பொழுதுதான் பரம தந்தையாகிய தேவன் மாந்த குலத்தை அழிவிலிருந்து மீட்கும் பொருட்டு தம் ஒரே பேரான குமாரனாகிய இயேசு கிறிஸ்துவை விண்ணுலகிலிருந்து இவ்வுலகுக்கு அனுப்பினார். மற்றபடி இயேசு தானாகவே அந்நிலைக்கு தன்னை உயர்த்திக்கொள்ளவில்லை. என உலக மக்கள் ஏற்றுக் கொண்டு நம்புவர் என்று இயேசு தமது நீண்ட ஜெபத்தில் கூறியிருக்கிறார். யோவான் 17,21 ;

## ஆனால் இன்று நாம் காண்பது என்ன?

நமது கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் சரீரம் என்று வர்ணிக்கப்படும் சபை (கொலே 1 : 18) பல கூறுகளாகப்பிரிந்து ஒன்றுக்கொன்று இணக்கமில்லாமல் இருப்பதோடு நிற்காமல் முரண்பாடாகச் செயல்பட்டு நம்மால் 'அஞ்ஞானிகள்' என்று கருதப்படும் மற்ற சமயத்தவர்கள் நம்முடைய ஒற்றுமையின்மையைச் சுட்டிக்காட்டி இகழும் நிலை ஏற்பட்டிருக்கிறது. இதனால் கிறிஸ்துவும் அப்போஸ்தலர்களும் அஞ்சின காரியங்கள் மெய்ப்பிக்கப்பட்டு வருவதைக் கிறிஸ்தவத்தில் உண்மையான பற்றும், பாசமும் கொண்ட நன்மக்கள் கண்டும், கேட்டும் மனம் புழுங்கி வருந்துகின்றனர்.

இவைகள் போதாது என்பதுபோல் நாளொரு சபையும் பொழுதொரு குழுக்களுமாக புதியபுதிய கூட்டங்கள் மழைக்காலத்துக் காளான்கள் போல முளைத்து, தங்களுக்குச் சாதகமான சில வசனங்களைப் பொறுக்கியெடுத்துக் கொண்டு உறுதியில்லாத ஆத்துமாக்களைத் தந்திரமாய் வசப்படுத்தித் தாங்களே கேட்டுக்கு, அடிமைகளாக இருந்தும் பிறருக்குச் சுயாதீனத்தை வாக்குத் தத்தம்

செய்தும் ஆசிர்வாதங்களை வாரிவழங்கியும் நமது இரட்சகரின் உடல்உறுப்புகளைக் கண்டதுண்டமாக வெட்டிக் கூறுபோட்டு ஏலம் விடுகிறோம்.

சரீர சுகமளிப்பு, மூடநம்பிக்கைகளுக்குத் தீனிபோடும் பில்லி, சூனியம், குறி சொல்லல், பிசாசு விரட்டல் போன்ற உளுத்துப்போன மாயாஜால வித்தைகளுக்கு முக்கியத்துவம் கொடுத்து விளம்பரப்படுத்தி, இயேசு பெருமானின் சிறந்த போதனைகளையும் சத்தான அருள்நெறிகளையும் பின்னுக்குத் தள்ளிவிட்டு கிறிஸ்து இயேசு இவ்வுலகுக்கு வந்த தலையாய நோக்கத்தை லூக் (19:10) இருட்டடிப்புச் செய்து தங்களை மேன்மைபடுத்திக் கொண்டு அலைகிறோம். கிறிஸ்தவ மார்க்கத்தின் 'விடிவெள்ளி' மார்ட்டின் லூதருக்கு முற்பட்ட காலத்தை 'இருண்ட காலம்' என்று வேத அறிஞர்கள் வர்ணிப்பர். ஆனால் இன்று அதைவிட மோசமான 'பேயாட்சி காலம்' என்றால் கூட மிகையாகாது, 'மனுஷ குமாரன்' வரும்போது பூமியில் விசுவாசத்தைக் காண்பாரோ? என்கிற இயேசுவின் ஐயப்பாட்டை உறுதிசெய்வது போன்ற செயல்கள் நாளுக்குநாள் பெருகிவருகின்றது. லூக் 18-8.

## இந்த அவலநிலை மாற என்ன செய்யலாம்?

மேற்குறிப்பிட்டுள்ள கொடுமைகளை முன்னொரு காலத்தில் கண்டும் கேட்டும் மனம் வருந்தின நீதிமானாகிய லோத்தைப் போல் வேதனையால் தவிக்கிற பரிசுத்தவான்கள் அனைவரையும் ஓர் அணியாகத் திரட்டிக் கள்ள போதகங்கள் தமிழ் மண்ணில் வேரூன்றித் தழைத்து வளராதபடிக்கு தடுத்து நிறுத்துவதற்கான நல்ல உள்ளங்கள் ஒன்று கூடி ஜெபிக்கலாம்.

தவறான போதகங்களின் ஊற்றுக்கண்களை அடைத்து முதலாம் நூற்றூண்டில் நடைமுறையில் இருந்த தூய கிறிஸ்தவத்தை மீட்டு அமைக்கும் வகையில் மாந்த அறிவால் கறைபடாத புதிய ஏற்பாட்டு கிறிஸ்துவத்தைப் பறைசாற்றலாம்.

பட்டி, தொட்டிகள், சிற்றூர், பேரூர், நகரங்கள் தோறும் சிந்திக்க விரும்புகிற இளைஞர்கள், மாணவச் செல்வங்கள் ஆகியோரை ஒன்று திரட்டி, வேத முகாம்கள் நடத்தி திருவசனமாகிய களங்கமில்லாத ஞானப்பாலாகிய (1 பேதுரு 2:3) புதிய ஏற்பாடு உபதேசங்களைக் கற்பிக்கலாம் (அப் 17:11) நற்செய்திப் பேருரைகள் நிகழ்த்தலாம்.

கிறிஸ்து இயேசுவின் அருள் நெறிகளை விளக்கும் நூல்கள், வார இதழ்கள், சிற்றறிக்கை ஆகியவைகளை அச்சிட்டு வழங்கலாம்.

உண்மைக் கிறிஸ்துவம் தழைத்தோங்க வேண்டும் என்று விரும்பும் சான்றோர்களே! தடம்புரண்டு கிடக்கும் சத்தியமார்க்கத்தை மீட்டு அமைக்கும் அவசர தேவையை உணர்ந்து செயல் பட அனைவரையும் வா ரீர்! வா ரீர்! என்று கரம் கூப்பி அழைக்கிறோம்.

**E. Z. செல்வநாயகம்**

## புதிய ஏற்பாட்டின் இரட்சிப்பின் வழி

**நீங்கள் விசுவாசிக்க வேண்டும். எதை?**

தேவனையும் அவருடைய குமாரனாகிய இயேசு கிறிஸ்துவையும், எபி 11:6; யோவான் 3:16; 1 பேதுரு 1:23.

**நீங்கள் மனந்திரும்ப வேண்டும். யாரிடத்திற்கு?**

தேவனிடத்திற்கு லூக் 13: 3; அப் 17: 30; 31; 2 கொரி 7 : 10.

நீங்கள் அறிக்கையிட வேண்டும். எதற்கு?

இருதயத்தில் நீதியுண்டாக. ரோமர் 10 : 9; 10; அப் 8 : 37.

நீங்கள் ஞானஸ்நானம் பெறவேண்டும். ஏன்?

(அ) பாவம் கழுவப்பட. அப் 22 : 16; அப் 2 : 38

(ஆ) தேவனுடைய பிள்ளையாக மாற. 1 யோவான் 3 : 1, எபே. 1 : 6.

(இ) கிறிஸ்துவைப் தரித்துக் கொள்ள. கலா 3 : 26, 27.

ஆரம்ப நாட்களில் மேற்கூறியவாறு செய்து தேவன் அருளிய இரட்சிப்பைப் பெற்றிருக்கிறார்கள். இன்றைக்கும் இதுவே வழி, வேறு வழியே இல்லை.

நீங்கள் இரட்சிப்படைய விருப்புகிறீர்களா? மேற்கூறியவற்றை நிறைவேற்றுங்கள்.

YOUR ATTENTION PLEASE:

# Radio Sri Lanka Broadcasts

**ENGLISH** The voice of Truth—Speakers: Reggie Gnanasundaram, J. C. Choate, John Stacy.
All correspondence should be sent to The Voice of Truth, Post Box 3815, New Delhi-110049.
Mondays-9: 00 to 9: 15 P. M.
Fridays - 7:45 to 8:00 P. M.

**HINDI** Satya Susamachar-Speaker:Sunny David.
All correspondence should be sent to Satya-Susamachar, Post Box 3815, New Delhi-110049.
Tuesdays-9:00 to 9-15 P. M.
Thursdays-9:00 to 9:15 P. M.
Fridays-9:00 to 9:15 P. M.
Sundays-12:45 to 1:00 P. M.

**TELUGU** The voice of Truth-Speaker: Joshua Gootam
All Correspondence should be sent to The Voice of Truth, Post Box 80, Kakinada 533001.
Sundays-2.30 to 2:45 P. M.
Tuesdays-2:30 to 2:45 P. M.
Thursdays-2:30 to 2:45 P. M.
Fridays -2:30 to 2:45 P. M.
Saturdays-2:30 to 2:45 P. M.

**TAMIL** The Way of Truth-Speaker : P. R. Swamy.
All Correspondence should be sent to The Way of Truth, Post Box 8405, Bangalore-560084.
Tuesdays-5:30 to 5:45 P. M.
Thursdays-6:45 to 7:00 P. M.
Sundays-6:45 to 7:00 P. M.

**MALAYALAM** The Voice of Truth-Speaker: P. K. Varghese
All correspondence should be sent to Church of Christ Thevally, Quilon-9 (Kerala)
Tuesdays-3:45 to 4:00 P. M.
Fridays-3:45 to 4:00 P. M.

**KANNADA** The Voice of Truth-Speaker:Robert Rathnakar
Box No 448, Bangalore 560004
Sundays-1:45 to 2-00 P. M.

## ALL ARE ENCOURAGED TO LISTEN

Bible Correspondence Courses and Christian Literature are available in these different languages from the addresses listed. Also the radio sermons are available in book form.

# வாசகர்களுக்கு ஓர் வேண்டுகோள்

எதிர்வரும் 1990–ம் ஆண்டு முதல் விலாசங்களைச் சரி–பார்த்து மாவட்ட வாரியாக ஒழுங்கு படுத்த விரும்பு–கிறோம். இதுவரை ஒரு முறை கூட எங்களுடன் தொ–டர்பு கொள்ளாதவர்களின் பெயர்களை நீக்கி விட்டு, பத்திரிக்கைவேண்டும் என்று விண்ணப்பித்துள்ளவர்களுக்கு அனுப்ப முடிவு செய்திருக்கிறோம். தேவை என்றால் தொடர்பு கொள்ளுங்கள்.

ஒரு வேளை நீங்கள் ஏற்கனவே தொடர்பு கொண்டி–ருந்தாலும் கூட தயவு செய்து மீண்டும் ஒரு முறை தகவல் கொடுத்து உதவுங்கள். இது மூன்றாவது அறிவிப்பு ஒத்து–ழையுங்கள் இது கிறிஸ்துவின் சபையாருக்கும் பொருந்தும்.

1. பெயர்:- 2. முழு முகவரி:

3. பின் கோடு: 4. மாவட்டம்:

அஞ்சல் அட்டை போதும். தயவு செய்து ஒத்துழையுங்கள்

ஆசிரியர்

Published by Church of Christ and Printed at Jeevasakthi Press. Erode-638 003.

Editor. E. Z. Selvanayagam.

PRINTED MATTER

BOOK-POST

TO

If undelivered please return to :

The Editor

**THIRUMARAI AASAAN**

2, Manal Medu Street,

ERODE - 638 002 (or)

Post Box No: 58 ERODE - 638 001.